## பொங்கல் திருநாளையொட்டி

# சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் மூன்று நாள் கலைவிழா

சென்னை, ஜன. 9 –

பொங்கல் திருநாளை யொட்டி சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் 3 நாள் கலைவிழா நடைபெறுகிறது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் சென்னை மெட்ரோ பொங்கல் கலைவிழா ஜனவரி 9, 10 மற்றும் 11 ஆகி தேதிகளில் தினந்தோறும் மாலை 5.45 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறுகிறது.

தஞ்சையில் உள்ள தென்னகப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து தென்னிந்திய மாநிலங்களின் பல்வேறு கலைகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளோடு கொண்டாடப் படவுள்ளது.

இவ்விழா சைதாப் பேட்டை மெட்ரோ ரயில் நிலையத்தில் 9-ந் தேதியும், சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் 10-ந் தேதியும், மற்றும் திருமங்கலம் மெட்ரோ ரயில் நிலையத்தில் 11-ந் தேதியும் நடைபெறுகிறது.

மூன்று நாட்களிலும் மாலை 5.45 மணிக்கு கேரள மாநிலம் பையனூரைச் சேர்ந்த சிகாபுதீன் குழுவினரின் திருவாதிரைக்கவி மற்றும் ஒப்பனா நடனம். கலை நிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு கர்நாடக மாநிலம் சிமோகாவை சேர்ந்த பூதியப்பா குழுவினரின் டோலுகுனிதா துள்ளிசை நடன நிகழ்ச்சியும், 7.15 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வம் குழுவினரின் தப்பாட்டம் கலைநிகழ்ச்சியும் நடைபெறுகின்றன.